# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *ஸ்ரீ சித்தார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்)*

***ஸ்ரீ சித்தார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்***

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விதுற விக்கிரமநாயக்க அவர்களால் 2013, ஜூன் மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

*(2013, மே மாதம் 20 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 249 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007333 -350 (2013/06)

## ஸ்ரீ சித்தார்த்த மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

''ஸ்ரீ சித்தார்த்த மன்றம்'' என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றவும், கொண்டு நடாத்து வதற்குமென ஹொரணை, கோணபல சந்தி, தலகலவில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள் களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்த கைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக் காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஸ்ரீ சித்தார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

ஸ்ரீ சித்தார்த்த மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஸ்ரீ சித்தார்த்த மன்றத்தின் உறுப்பினர்களாக இப்போதுள்ளவர் களான அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் ''ஸ்ரீ சித்தார்த்த மன்றம்'' என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றா யிருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொதுஇலச் சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

2-PL 007155 -50 (2013/04)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பௌத்த கலாசாரத்தைப் பேணியொழுகவும் அவற்றை மேம்படுத்தவும் அதற்குரிய பணிகளில் ஈடுபடுதலும் ;

(ஆ) மாணவ, மாணவிகளுக்கான கல்வி நிலையங்களையும் தங்குமிட வசதிகளையும் தாபித்துப் பேணுதலும், உதவி தேவைப்படுவோரின் பிள்ளைகளின் கல்வியை முன்னேற்றி மேம்படுத்துதலும் ;

(இ) உதவி தேவைப்படும் மாணவருக்கு நிதி உதவிகளை வழங்குதலும் புலமைப்பரிசில்களை வழங்குதலும் ;

(ஈ) இயற்கை அழிவுகளுக்கு ஆளானவர்களுக்கு தேவையான உதவியளித்தல் ;

(உ) சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ;

(ஊ) ஏழை, அநாதை மற்றும் வாய் பேச இயலாதோருக்கு போசாக்கு நிறைந்த உணவு, உடை, வீட்டு வசதிகளை வழங்குதல் ;

(எ) கண், செவிப்புலனற்றோர் மற்றும் வாய் பேச இயலாதோருக்கு நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(ஏ) வயோதிபர் இல்லங்களைத் தாபித்துப் பேணுதல் ;

(ஐ) கலாசார அலுவல்களில் ஈடுபடுதல் ;

(ஒ) சிங்களம், பாளி, சமஸ்கிருதம், பௌத்த மதம், ஆயுர்வேத மருத்துவம், தொழில்நுட்பம் என்பவற்றில் மகாசங்கத்தினருக்கும் பொதுமக்களுக்கும் கற்கைநெறிகளை ஏற்பாடு செய்வதன்மூலம் கல்வியின் முன்னேற்றத்தை ஊக்குவித்தல் ;

(ஓ) சமயப் பிரசங்கங்கள், பௌத்த பூஜைகள், சேத்திய பூஜைகள், போதி பூஜைகள், தியான வகுப்புகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் சுற்றுலாக்களை நடாத்துதல் ;

(ஔ) ஆயுர்வேத மற்றும் சுதேசிய மருத்துவ கற்கைகளை ஊக்குவித்தலும் மருத்துவ மூலிகைகளைப் பயிரிடுவதற்கு மக்களை உற்சாகப்படுத்தலும் ;

(க) இனம், மதம் என்பவற்றைப் பொருட்படுத்தாது, மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்தல் ;

(ங) சூழலை பாதுகாப்பதற்கும், முகாமை செய்வதற்கும், பேணுவதற்குமான கருத்திட்டங்களைத் தாபித்தலும் அவற்றைப் பேணுதலும் ;

(ச) இலங்கையில் இளைஞர்களுக்கான வாழ்க்கைத் தொழிற் கல்வியை நடாத்துதல் ;

(ஞ) சிறுகைத்தொழில்களில் மாணவர்களைப் பயிற்றுவதுடன், அவர்களை நற்குடிமக்களாக்குவதற்காக அவர்களுக்கு நிதி அல்லது வேறு உதவிகளை அளித்தல் ;

(ட) பாடசாலைகளையும் கல்வி நிறுவனங்களையும் நிறுவி அத்துடன் பேணி வருவதன்மூலமும், புலமைப்பரிசில்களை ஏற்படுத்துவதன்மூலமும் கல்வியை வளரச் செய்தலும் மேம்படுத்துதலும் ;

(ண) சமூக அபிவிருத்திக் கல்வி நிறுவனமொன்றைத் தாபித்துக் கொண்டுநடாத்துதலும், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உகந்தனவான கருத்திட்டங்களைத் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துதலும் ;

(த) ஸ்ரீ சித்தார்த்த மன்றத்தின் கிராமிய சமுதாய மன்றக் கிளைகளை நிறுவி அவற்றைக் கொண்டுநடாத்துதல் ;

(ந) ஏதேனும் கைத்தொழிலில், வர்த்தகத்தில் அல்லது ஏற்றுமதி அல்லது இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடுதலும் அத்துடன் கமத்தொழில், கைத்தொழில், வர்த்தக முயற்சிகளை மேம்படுத்துதலும் கொண்டு நடாத்துதலும் அத்துடன் அத்தகைய முயற்சிகளில் எவரேனும் ஆட்களுக்கு உதவுதலும், துணைபுரிதலும் அத்துடன் தொழிநுட்ப நுணுக்கங்களைப் பொது மக்களுக்கு வழங்கும் நோக்கில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதலும் அத்துடன் சேவைகளையும் பிரசாரச் செயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தலும் ;

(ப) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் அத்துடன் வேறு ஆட்களுக்குப் புலமைப்பரிசில்கள், நிதி போன்ற வற்றை வழங்குவதன்மூலம் அல்லது வேறு வழியில் உதவி வழங்குதல் ;

(ம) நூலகங்களை ஏற்பாடுசெய்து பேணுவதும் புத்தகங் கள், நினைவுமலர்கள், பருவ ஏடுகள் முதலியவற்றை வெளியிடுதலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடைவதற்கும் ஏதுவான அல்லது உகந்தனவான வேறு எல்லாக் காரியங்களையும் கருமங்களையும் செய்தலும் ;

(ய) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான கண்காட்சிகள், விரிவுரைகள், கருத் தரங்குகள், கலந்துரையாடல்கள், வேலைக்களங்கள், வகுப்புகள், விவாதங்கள், மாநாடுகள், உல்லாசப் பயணங்கள், சுற்றுலாக்கள் என்பவற்றை அல்லது வேறு நடவடிக்கைகளை மேம்படுத்தலும், ஒழுங்குசெய்தலும் அத்துடன் நடாத்துதலும் ;

(வ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை ஒத்த நோக்கங் களையுடைய வேறு நிறுவனங்கள், அமைப்புகள் அத்துடன் சங்கங்கள் என்பனவற்றுடன் கூட்டுச்சேர்ந் தும் இணைந்தும் செயற்படுதல் ;

(ல) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் யாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதற்கு அவசிய மாகக்கூடியவாறான அத்தகைய வேறு வழிவகைகளை எடுத்தல்.

**4.** இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வருவனவற்றிற்கு தத்துவங்களையுடையதாதல் வேண்டும் :- *கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

(அ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயுமுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிடமிருந்து மானியக்கொடைகளை அல்லது நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல் ;

(ஆ) ஏதேனும் வங்கியில் நடைமுறை, சேமிப்பு அத்துடன் வைப்புக் கணக்குகளைத் திறத்தலும், பேணுதலும் அத்துடன் அதன் நிதியங்களை அது பொருத்தமானதென எண்ணக்கூடிய அத்தகைய பிணைப்பொறுப்புகளில் முதலீடு செய்தலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து அவற்றை நிறைவேற்றுதல் ;

(ஈ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணம் கடனெடுத்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலைக்கமர்த்துதலும் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர்களைப் பதவி நீக்குதலும் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

*கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத ஓர் ஒழுங்கமைப் பாக இருத்தல்.*

**5**. *(1)* கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத ஒரு ஒழுங்கமைப்பாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகையவாறான பணிபுரிதலும் வேண்டும். இலாபங்களின் அல்லது பங்கிலாபங்களின் பங்கெதுவும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது.

*(2)* கூட்டுத்தாபனம் கலைக்கப்படும்பட்சத்தில், கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் செலுத்தியபின் மீதியாகவுள்ள சொத்துக்கள், தரும அல்லது கல்வி நோக்கங்களுக்காகத் தாபிக்கப்பட்ட நிதியத்தில் அல்லது ஒழுங்கமைப்பில் மட்டும் பயன்படுத்தப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**6**. *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைவாக, அத்தகைய விதிகளில் ஏற்பாடுசெய்யக்கூடியவாறாகவும் அவற்றுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்களுமான பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு ஆட்களையும் கொண்டமைந்த முகாமைச் சபையினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் இச்சட்டத்தின் அட்டவணையில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள மன்றத்தின் முகாமைச்சபையாகவிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7**. *(1)* கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையில் இதுகாலவரை அல்லது இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும், பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை மறுசீரமைப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாகக் கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான நிதியத்தை ஒதுக்கை அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(3) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங் களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**8.** ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டிற்குக் குறையாத பெரும்பான்மைகொண்டும், காலத்திற்குக்காலம், பின்வரும் எல்லா அல்லது ஏதேனும் கருமங்களுக்காக, இச்சட்டத்தில் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இயைபாயிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாகவிருத்தல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மையின் வகுப்பாக்கமும் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல், மீளப்பெறுதல் அத்துடன் வெளியேற்றுதலும் ;

(ஆ) பதவி தாங்குநர்களைத் தெரிவுசெய்தல், பதவி தாங்குநர்களின் பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும் அவர்களது தத்துவங்கள், ஒழுக்கம் அத்துடன் கடமைகளும் ;

(இ) முகாமைச் சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், அதன் தத்துவங்கள், ஒழுக்கம் அத்துடன் கடமைகள் அத்துடன் முகாமைச் சபையின் உறுப்பினர் களின் பதவிக் காலம்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர் கள் அத்துடன் சேவையாளர்களின் தத்துவங்கள், ஒழுக்கம், கடமைகள் அத்துடன் பணிகள் ;

(உ) முகாமைச் சபையின் கூட்டங்களில் அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, அக்கூட்டங்களைக் கூட்டுதலுதம் நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள் அத்துடன் நிகழ்ச்சி நிரல், அவற்றிற்கான கூட்ட நடப்பெண்ணும் அவற்றில் தொழிலைக் கொண்டுநடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும், அதன் நிதியங்களைக் கட்டுக்காவல் செய்தல் அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைப் பொதுவாக முகாமைசெய்தல், அத்துடன் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று அதே முறையிலும் அதேபோன்றதொரு கூட்டத்திலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அவற்றிற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள, மன்றத்தின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இயைபாயில்லாத வரையில், இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.

*மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்தினால் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.*

**9**. இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்கு வருமதியாக உள்ள எல்லாத் தனிசுளும் பொறுப்புக்களும் இத்தால் உருவாக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு கொடுக்குமதியாயிருக்கும் எல்லா தனிசுகளும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலதான எல்லா ஒப்பப் பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு, உரித்தாக வரக்கூடியவாறான ஏதேனும் அசைவுள்ள அல்லது

அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதும் ஆற்றலுடையதுமாதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படலும் வேண்டும், அத்துடன் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத்தத்துவத்தைக் கொண்டிருத் தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைச் சபையின் தவிசாளரின் கட்டுப்பாட்டில் இருத்தல் வேண்டு மென்பதுடன், முகாமைச் சபையின் அனுமதியுடனும் அத்துடன் முகாமைச் சபையின் இரண்டு உறுப்பினர்களது முன்னிலை யிலுமன்றி, எத்தகையதுமான எச்சாசனத்திலும் இடப்படுத லாகாது. அவர்கள் தாம் சமுகளித்திருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தல் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**12**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டி ணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்திற் குறிப்பிட்டவர்களும், அவர்கள்மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறேவ ரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை

[வாசகம் 6 (2)]

**முகாமைச் சபை :**

பணிப்பாளர் நாயகம் : வண. தலகல சுமணரதன தேரர்
செயலாளர் : திரு. கே. எஸ். பெரேரா
பொருளாளர் : திரு. பி. எச். லீலாரத்ன

**ஏனைய உறுப்பினர்கள் :**

திரு. பீ. பி. ஜயதுங்க
திரு. எம். ஆர். கருணாதிலக
திரு. காமினி ஜயந்த அபேவிக்கிரம
திரு. டபிள்யு. டி. அபேசேகர
திரு. ஜயசேன ஜயக்கொடி

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்